பக்கங்கள் 17+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 12 திங்கட்கிழமை 28.07.2025 | அதிர்வு 359

## நல்லூர் கந்தன் ஆலய கொடியேற்றம் நாளை

### இன்று கொடிச்சீலை கையளிப்பு



(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### இளைஞர் ஒருவரைக் கடத்திக் கொலை செய்த சம்பவம்:

# முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது



முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இன்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நிஷாந்த உலுகேதென்ன கடற்படைத் தளபதியாகக் கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நாமலை உடன் கைது செய்க!

### அம்பாந்தோட்டை நீதிமன்றம் அதிரடி உத்தரவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை உடன் கைது செய்யுமாறு அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்று தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தமையால் அவருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று காலை மாலைதீவு சென்றுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. 04

# மாவையின் வாழ்க்கை மிகப் பெரும் சரித்திரம்

### ஆறாவது மாத நினைவஞ்சலி நிகழ்வில் சிறீதரன் தெரிவிப்பு

“மாவை சேனாதிராஜாவின் வாழ்க்கை என்பது ஒரு மிகப் பெரிய சரித்திரம். எமது இனத்தைப்பொறுத்த வரை இனிமேல் இவ்வாறான ஒரு தலைவரை நாங்கள் பெற முடியாது. அவரின் எண்ணத்தில் எந்த நேரமும் இனம் பற்றிய சிந்தனை இருந்துள்ளது. யாரையுமே நோகடிக்காத ஒரு நல்ல மனம் அவரிடம் இருந்தது. அவர் இல்லாத இந்த ஆறு மாதங்களில் அவரது பலம் என்ன, அவரது பலவீனம் என்ன என இன்று பலர் அறிவதற்குத் தலைப்பட்டு இருக்கின்றார்கள்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 04







# மாவை சேனாதிராஜாவின் 6ஆம் மாத நினைவஞ்சலி!

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவின் ஆறாவது மாத நினைவஞ்சலி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நற்பணி மன்றமும் வட்டுக்கோட்டை பகுதி மக்களும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. பின்னர் குடும்பத்தினருக்கான நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மறைந்த மாவை சோ.சேனாதிராஜாவின் புதல்வன் மா.கலையமுதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா. குகதாஸ், திரு.கஜதீபன், யாழ். மாநகர சபையின் உறுப்பினர் ப.தர்ஷானந், தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவன், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி ஐ.நாகரஞ்சினி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சர்வேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், தந்தை செல்வா நற்பணிமன்றத்தினர், போராளிகள், நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













# நல்லூர் கந்தன் ஆலய கொடியேற்றம் நாளை

## இன்று கொடிச்சீலை கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ள நிலையில்,கொடியேற்றத் துக்காகச் சம்பிரதாயபூர்வமாகக் கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆல யத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் இன்று திங்கட் கிழமை நடைபெற்ற விசேட பூஜை வழி பாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து சிறிய தேர் ஒன்றில் கொடிச்சீலை பருத் தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆல யத்தை வந்தடைந்து. கொடிச்சீலை நல்லூர் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய மகோற்சவக் கொடி யேற்றம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்களுக்கு மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறும்.

மகோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர் வரும் 7ஆம் திகதியும், 22ஆம் திரு விழாவான மாம்பழத் திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட்19ஆம் திகதியும் , 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறு நாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெற்று, மகோற்சவ திருவிழாக்கள் நிறைவு பெறும்.













# பொரளையில் கோர விபத்து ஒருவர் பலி; எழுவர் காயம்

## வானின் சாரதி கஞ்சா உட்கொண்டிருந்தமை மருத்துவ பரிசோதனையில் உறுதி

இராஜகிரியவில் இருந்து பௌத்த லோக மாவத்தை நோக்கிச் சென்ற கிரேன் வான் ஒன்று, பொரளை மயான சுற்றுவட்டத்தில் உள்ள போக்குவரத்து சமிக்ஞை அருகில் நிறுத்தப்பட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 3 கார்கள் மீது மோதியுள்ளது.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பாகக் கைது செய்யப்பட்ட கிரேன் வாகனத்தின் சாரதி கஞ்சா உட்கொண்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நபருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது இது தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 7 பேர் தற்போது கொழும்பு தேசிய வைத்திய



சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் 8 பேர் காயமடைந்தார்கள் என்றும், அவர்களில் ஆண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போதே உயிரிழந்தார் என்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் இருவர் பெண்கள் என்றும், ஏனைய 5 பேர் ஆண்கள் என்றும் வைத்தியர் குறிப்பிட்டார்.

விபத்தில் உயிரிழந்தவர் அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவர் ஆவார்.

# அநுரவுக்கு மாலைதீவில் அமோக வரவேற்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாலைதீவுக்கான அரச விஜயத்தை ஆரம்பித்து இன்று முற்பகல் வெலானா சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையின் மரியாதைக்கு மத்தியில் ஜனாதிபதியை அந்நாட்டு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு வரவேற்றார்.

ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக மாலைதீவு வெலானா சர்வதேச விமான நிலையத்தின் விசேட விருந்தினர் வருகை முனையத்தில் சிறுமிகள் குழுவொன்று



அழகிய கலாசார நடனத்தை நிகழ்த்தியதுடன், ஜனாதிபதி அந்த சிறுமிகளுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ வைபவம் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு தலைமையில் மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ள குடியரசு சதுக்கத்தில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த அரச விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மாவையின்...**

மாவை சேனாதிராஜாவின் ஆறாவது மாத நினைவுப் பகிர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"2001 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்படுத்தியிருந்த ஒற்றுமையை, 2010 இல் இருந்து அதற்குப் பின்னர் ஓரளவுக்கு பேணியதில் மாவை சேனாதிராஜாவுக்கு பெரும் பங்கு உண்டு.

என்னை அரசியலுக்குள் கொண்டு வந்ததும் அண்ணன் மாவை சேனாதிராஜாவே. அந்த நேரம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த இராசநாயகத்தை அரசியலுக்குள் கொண்டு வர முயற்சித்தோம். சில காரணங்களுக்காக அவர் விலகியதால் வைத்தியர் சத்தியமூர்த்தி, அரியரட்ணம், தர்மரட்ணம் எனச் சிலரை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சித்தும் அது பலனளிக்காமல் போகவே நான் அரசியலுக்குள் வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மாகாண சபைத் தேர்தல் காலத்தில் நாங்கள் அவரிடம் பேசுகின்ற போது அவர் எம்மிடம், இனம் முக்கியம், இனத்துக்காகப் பாடுபட வேண்டும், அதற்காக நாங்கள் எந்த விட்டுக்கொடுப்பும் செய்ய வேண்டும் என்றார். அவரது இழப்பு என்பது தமிழ் மக்களை பொறுத்தவரை ஒரு பாரிய இழப்பு. அவர் தமிழ்த் தேசிய இனத்துக்குக் கிடைத்த ஓர் ஒப்பற்ற தலைவர்.

தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளை எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு சென்றவர் அண்ணன் மாவை சேனாதிராஜா. நிறையப் பேரால் பேசப்பட்டவராகவும் அல்லது விமர்சிக்கப்பட்டவராகவும் அவர் இருந்தார். அனைத்தையும் பொறுத்து இனத்துக்காக வாழ்ந்த மிகப் பெரிய ஒரு மனிதர் அவர்.

ஒருமுறை அவர் இறந்து விட்டார் என ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினர் அவரைத் தூக்கி வீசி விட்டுச் சென்றார்கள். அதற்குப் பின்னரும் அவர் உயிருடன் வந்தார் என்பது அபூர்வம். அதேபோல் அவர் 2001 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்காக ஊர்காவற்றுறை - தம்பாட்டிக்குச் சென்றபோது அங்கு வைத்து ஈ.பி.டி.பியினரால் அவரது மண்டை பிளக்கப்பட்டது. அதற்குப் பின்னர்தான் அவரது உடலில் ஒரு சமநிலை மாற்றம் ஏற்பட்டது.

அவரது வாழ்க்கை என்பது ஒரு மிகப் பெரிய சரித்திரம். எமது இனத்தைப் பொறுத்தவரை இனிமேல் இவ்வாறான ஒரு தலைவரை நாங்கள் பெற முடியாது. இப்படியான ஒரு நல்ல மனிதருக்கு நிறைய மன வருத்தங்களை கொடுத்தவர்கள் பலர். மனோரீதியாக அவரைப் பாதிப்படையைச் செய்தவர்கள் பலர். ஆனால், வரலாறு அவர்களுக்கு அந்தத் தண்டனையை திருப்பி வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. இயற்கையும் வரலாறும் தண்டனையை வழங்கும். அதில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது. நாங்கள் செய்வது உமக்கு என்பது ஒரு உலக நியதியும் விதியும் கூட. நல்லது செய்தால் நல்லது கிடைக்கும், கெட்டது செய்தால் கெட்டது கிடைக்கும்." - என்றார்.

**நாமலை உடன்...**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாலைதீவுக்குச் சென்ற அதே விமானத்திலேயே நாமல் ராஜபக்ஷ பயணித்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற மாலைதீவு சென்றுள்ள நாமல் எம்.பி., நாளை மாலை நாடு திரும்பவிருந்தார். எனினும், தனது பிடியாணைக்கு எதிராக மனுத் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக அவர் நாளை காலை நாடு திரும்பவுள்ளார் என்று அறியமுடிகின்றது.





# நல்லூர் ஆலயச் சூழலுக்கான ஒரு தொகுதி மணல் வந்தது!

**(ந.லோகதயாளன்)**

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலுக்கான ஒரு தொகுதி மணல் இன்று எடுத்து வரப்பட்டது.

நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக ஆலயச் சூழல் மற்றும் நேர்த்திக் கடனில் அங்கப் பிரதிஷ்டை புரியும் பக்தர்களின் வழித் தடங்கலில் வருடந்தோறும் மணல் பரவுவது வழமையாகும்.

இதற்காக வருடந்தோறும் 120 உழவு இயந்திரங்கள் அல்லது 30 டிப்பர் வாகனங்களில் மணல் பெற்று வந்தபோதும் கரையோரச் சுற்றுச் சூழல் பாதிப்பு காரணத்தால் மணல் பெறுவதில் இம்முறை நெருக்கடி நிலை காணப்பட்டது.

இதையடுத்துப் பல தரப்பினரும் தொடர்ந்த முயற்சியின் பயனாக இன்று காலை முதல் ஒரு தொகுதி மணல் எடுத்து வரப்பட்டு ஆலயச் சூழலில் பரப்பப்பட்டது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் யாழ்ப்பாணம் மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டது.







# சர்வதேச நீதி வேண்டி மட்டக்களப்பில் கவனவீர்ப்பு

(கனகராசா சரவணன்)

கறுப்பு ஜூலை பேரவலத்தை நினைவு கூர்ந்தும் மற்றும் வடக்கு, கிழக்கில் அடையாளம் கானப்படும் மனிதப் புதை குழிகளுக்குச் சர்வதேச நீதி வேண்டியும் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் கிறிஸ்தவ குருமார்கள், காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பேரினவாதத்தின் முகம்

சிங்கள - பௌத்த பேரினவாதம் பொறுத்த சமயங்களில் தனது கோர முகத்தை கூச்சநாச்சமின்றி வெளி காட்டப் பின்நிற்பதில்லை.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வாக இந்திய அரசின் தலையீட்டோடு கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறை மையே தேவையற்றது என்ற பேச்சு இப்போது பேரினவாதிகள் மத்தி யில் இருந்து எழத் தொடங்கி இருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத் துவதற்கு அடிப்படையான மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை சீர்திருத்துகின்றோம் என்ற பெயரில் நல்லாட்சி அரசின் காலத்தில் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க அந்தத் தேர்தல் சட்டத்தை செயலிழக்க வைத்தார்.

அதனால் எட்டு ஆண்டுகள் அந்த முறைமை நடத்தப்படாமல் இழுபடுகின்றது. இப்போது அந்த மாகாண சபை முறைமையே அவசி யமா என்று கேள்வி எழுப்புகின்றார் பின்னர் அதே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது அவரது வலது கரமாகச் செயற்பட்ட அவரது அரசின் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

"மாகாண சபைகள் இன்றி நாடு பல வருடங்கள் பயணித்திருக்கிறது. எனவே, இதற்குப் பின்னரும் இந்த மாகாண சபை முறை நாட்டுக்குத் தேவையா என்று சிந்திக்க வேண்டும். மாகாண சபை ஊடாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. மாறாக இதற்கு பாரியளவு நிதி செல விடப்படுகிறது. எனவே, மாகாண சபை நாட்டுக்குத் தேவையா என்பது தொடர்பில் மீள சிந்திக்க வேண் டிய காலம் மீள உருவாகியிருக் கிறது. இது தொடர்பில் சகல தரப்பி னரும் கலந்துரையாட வேண்டும். தமது யோசனைகளை முன்வைப் பது அவசியம். மாகாண சபை முறைமை தொடர்பாக முழுமை யான மீள் சிந்தனை அவசியமாகி றது. மாகாண சபை முறைமையை அப்படியே கொண்டு செல்வதா? அல்லது அதனை முழுமையாக மாற்றியமைப்பதா? அல்லது அதனை இல்லாமல் செய்வதா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்" - என்றார் அவர்.

"கல்வி, சுகாதாரம், முதலீடுகள், விளையாட்டு உள்ளிட்ட விடயங்க ளில் மாகாண மட்டத்தில் பரந்து பட்ட வகையில் செயல்பட ஒரு பொறிமுறை அவசியம். அதனை நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்யலாம். தற்போது கூட மாவட்ட அபிவிருத்தி சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைமை தாங்குகின்றனர். எனவே இதற்கு மாகாண சபை முறைமை தேவையற்றதாகவே நாங்கள் கருது கிறோம். இது தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்த முடியும். ஆனால் கடந்த காலங்களில் இதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. வடக்கில் முன்னாள் முதல மைச்சர் விக்னேஸ்வரன் இருந்த காலத்தில் கூட அங்கு மிகப் பெரிய மாற்றங்களோ அபிவிருத்திகளோ இடம்பெறவில்லை." - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

மாகாண சபை முறைமை சுமார் நாற்பது ஆண்டுகளாக இருக்கின்றது என்கிறார் தினேஷ். ஆனால் வடக்கு, கிழக்கு மக்களுக்காகக் கொண்டு வரப்பட்ட அந்த முறைமை வடக்கு மக்களைப் பொறுத்தவரை ஏழு ஆண்டுகள் கூட தெரிவு செய்யப் பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலம் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கி டையில் அந்த முறைமை லாயக் கற்றது என்று கூறி அதனை முழுமை யாகத் தூக்கிக் கடாசுவதற்கு பேரின வாதம் தயாராகின்றது என்பதைத் தான் முன்னாள் பிரதமரின் கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.






# டெங்கு நோய் வேலைத்திட்டம் தலவாக்கலையில் முன்னெடுப்பு

**(பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)**

தலவாக்கலை பிரதேச செயலகத்தினர், கொட்டகலை பொது சுகாதாரப் பிரிவினர், விஷேடஅதிரடி படையினர், பொது மக்கள் ஆகியோர் இனைந்து டெங்கு நோயைக் தடுப்பதற்கான வேலைத்திட்டத்தை தலவாக்கலயில் முன்னெடுத்தனர்.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளர்கள் கொட்டகலை வைத்திய சாலையின் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர் என்று பொது சுகா தார வைத்திய அதிகாரிகள் தெரிவித்த னர்.

இதில் இரண்டு பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதோடு மேலும் இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இந்தப் பகுதியிரல் நிரம்பியிருந்த நீர் மாதிரியை ஆய்வு செய்த பின்னர் டெங்கு நோய் பாதிப்பு அதிகமாக உள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, டெங்கு நோய் தொடர் பாகப் பாடசாலை மாணவர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டது.




## அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையால்

# மன்னார் நகர சபை, பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர்கள் கௌரவிப்பு




**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபையின் தவிசாளர் கள் மற்றும் உப தவிசாளர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னர் கிளையின் தலைவர் அஷ்ஷேஹ் அசீம் தலைமையில் சனிக்கிழமை (26) மன்னார் ஆர். டி .எப். மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கௌரவ அதிதிகளாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் ஜப்ரான், மன்னார் நகர சபையின் உப தவிசாளர் முஹம்மது உசன், மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளர் . சாந்தினி குரூஸ் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வருகை தந்த கௌரவ அதிதிகளுக்கு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னர் நகர கிளை யின் சார்பாக நினைவுச் சின்னம் வழங் கப்பட்டது.

# வடக்கு – கிழக்கு கூட்டுறவுகளுக்கிடையில் உத்தியோகபூர்வமாகச் சந்தைப்படுத்தல்!

(த.சுபேசன்)

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமரின் முன்னேற்பாட்டில், “கூட்டுறவுக்குள் கூட்டுறவு” என்ற தொனிப்பொருளின் கீழ் மாகாணங்களை தாண்டிய சந்தைப்படுத்தல் முயற்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த முயற்சியானது வடக்கில் இயங்காத நிலையில் காணப்பட்டிருந்த கூட்டுறவு தொழிற்சாலைகளை மீளச் செயற்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட அரிசி, அரிசிமா போன்ற பொருள்களைக் கிழக்கு மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளது.



கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக, வடக்கில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் திருகோணமலை உள்ளிட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்குச் அனுப்பி வைக்கப்பட்டன.

திருகோணமலை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

“போருக்கு முன்பாக வடக்கு – கிழக்கு கூட்டுறவுகளுக்கு இடையிலான உறவுகள் வலுவானவையாக இருந்தன. ஆனால் யுத்தத்ததுக்குப் பின்னர் அந்த உறவுகள் மறுபடியும் புதுப்பிக்கப்படாமல் இருந்தமை மனவருத்தத்துக்கு உரிய விடயமாகும்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முயற்சி, எமக்கு வாய்ப்பாகவே காணப்படுகின்றது. இது உண்மையாகவே ‘கூட்டுறவுக்குள் கூட்டுறவு’ என்ற சிந்தனையை உயிர்ப்பிக்கும் முயற்சி. இது தொடர்ந்து தொழில் நுட்ப சேவைகளையும் நமக்கு கொண்டுவரும் என்று நம்புகிறோம்.

இந்த செயற்றிட்டம், வடக்கு – கிழக்குப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுகள் இடையிலான ஒற்றுமையையும், சந்தைப்படுத்தல் வலையமைப்பையும் மீள உறுதிப்படுத்தும் முக்கியமான படியாகக் கருதப்படுகிறது.– என்றார்.

# வவுனியாவில் லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத் திட்ட உதவி வழங்கல்





(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட சர்வதேச லயன்ஸ் கழகத்தால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின் ஆலய வளாகத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்தவகையில், இலவச கண் பரிசோதனையும், மூக்கு கண்ணாடி வழங்கல், வறிய குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு புத்தக பைகள் வழங்கல், சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் பங்கு பற்றச் செல்லும் வீராங்கனைகளுக்கு உதவித் தொகை வழங்கல், சக்கர நாற்காலி போன்றன வழங்கி வைக்கப்பட்டன.



வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் கே.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வட மாகாண ஆளுநர் கே.எம்.பத்மநாதன் மற்றும் அவரது துணைவியார் லயன் பத்மா தேவி ஆகியோர் கலந்து கொண்டனர். வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் முக்கியஸ்தர்கள், அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# பட்டயக் கணக்கில் ஆறு பட்டங்களை பூர்த்தி செய்து சாதனை!

(எம்.ஏ.றமீஸ்)

பட்டயக் கணக்கில் ஆறு பட்டங்களை பூர்த்தி செய்து சாதனை படைத்து இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார் அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிராஸ் காசிம். இந்தச் சாதனையை அண்மையில் நிகழ்த்தியுள்ளார்.

ஒட்டு மொத்த அரபு நாடுகளிலும் ஆறு சாட்டப் பட்டங்களை நிறைவு செய்த ஒரேயொரு இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

தற்போது கட்டார் நாட்டில் வசித்து வரும் இவர் Chartered QS, Chartered Procurement, Chartered Logistic, Chartered Arbitrator, Fellow Chartered Construction Manager மற்றும் Fellow Chartered Manger எனும் 6 பட்டங்களை நிறைவு செய்தே இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.




இவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு 'பிறண்ட்ஸ் எவர் 98-01' அமைப்பின் மூலம் அக்கரைப்பற்று தனியார் சுற்றுலா விடுதி ஒன்றில் இடம்பெற்றது. இதன்போது இவரின் சாதனையைப் பாராட்டி பல்வேறு வாழ்த்துரைகள் இடம்பெற்றன. நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் தேசிய ரீதியில் உள்ள பல்வேறு பிரதேச மக்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் பல்வேறுபட்ட சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நன்கொடை நிதியுதவிகளை வழங்கி வருகிறார்.







## அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி

# உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் 300 பேர் பங்கேற்க ஏற்பாடு!

**(றியாஸ் ஆதம்)**

அறுகம்பே பிரதேசத்துக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று போரத்தின் தலைவரும், இயன் மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தெரிவித்தார்.

இந்தப் போட்டி தொடர்பான அறிமுக நிகழ்வும் ஊடகவியாளர் சந்திப்பும் அறுகம்பே அபிவிருத்தி போரத்தின் தலைவரும், இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தலைமையில் சனிக்கிழமை (26) அறுகம்பே றாம்ஸ் கபே உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அறுகம்பே பிரதேசம் சுற்றுலாத் துறைக்கு பெயர்போன ஒரு சிறந்த இடமாகும். தற்போது இங்கு உள்நாட்டு மற்றும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக நீர்ச்சறுக்கல் விளையாட்டிலும், அறுகம்பே பிரதேசத்தின் இயற்கை வளங்களைக் கண்டுகழிக்கவும் வருகை தரும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி இந்த முறையும் அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

“ஒன்றாக ஓடி ஒன்றாக எழுவோம்” எனும் தொனிப் பொருளில் இடம் பெறவுள்ள சர்வதேச தரத்திலான இந்த மரதன் ஓட்டப் போட்டியில் உள்நாட்டு வெளிநாட்டு மரதன் ஓட்ட வீரர்கள் சுமார் 300 பேர் பங்குபற்றவுள்ளனர். விசேடமாக மரதன் மற்றும் நெடுந்தூர ஓட்டங்களில் பிரசித்தி பெற்ற தென் ஆபிரிக்கா, கென்யா போன்ற நாடுகளில் இருந்தும் பல வீரர்கள் முன்கூட்டியே பதிவுகளைச் செய்துள்ளனர்.

அந்தவகையில் இதுவரை 14 நாடுகளில் இருந்து 60 வெளிநாட்டு வீரர்களும், உள்நாட்டினைச் சேர்ந்த 120 வீரர்களும் ஒன்லைன் ஊடாகப் பதிவுகளைச் செய்துள்ளனர். மேலும் இந்த மரதன் போட்டியில் பங்கேற்குமாறு உள்நாட்டு வெளிநாட்டு வீரர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதியான பணப் பரிசில்களும், பதக்கம் மற்றும் சான்றுதழ்களும் வழங்கப்படவுள்ளன. உலகில் இடம்பெற்றுவரும் பிரசித்தி பெற்ற மரதன் போட்டிகளில் அறுகம்பே அரை மரதனும் இடம்பிடிக்க வேண்டும் எனும் நோக்கில் அறுகம்பே அபிவிருத்தி போரம் 7 ஆவது தடவையாக இந்தப் போட்டியை நடத்துகின்றது. – என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாஸித், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல், பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.மாபிர், அறுகம்பே அபிவிருத்தி போரத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எம்.எச்.எம்.ஜமாஹிம், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மலிக் உட்பட பாதுகாப்புத் துறையினர், அறுகம்பே அபிவிருத்தி போரத்தின் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# பெண்கள் வலுவூட்டல் திட்ட தொடக்கவிழா நாளை நுவரெலியா மாவட்ட செயலகத்தில்

**(மஸ்கெலியா)**

நுவரெலியா மாவட்டத்தில் பெண்களின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூக வலுவூட்டலுக்காகச் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களின் தொடக்க விழா மற்றும் கண்காணிப்பு சுற்றுப் பயணம் நாளை (29) காலை 11 மணிக்கு நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும், பெண்கள் , குழந்தைகள் விவகார அமைச்சர் திருமதி சரோஜா சாவித்ரி பவுல்ராஜ் தலைமையில் நடைபெறும்.

இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகம், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சகம், இலங்கை மகளிர் பணியகம், நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்கேற்புடன் இது நடைபெறும்.




# தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு இரண்டு கணினி இயந்திரங்கள் அன்பளிப்பு








(தலவாக்கலை பி.கேதீஸ்)

தமிழ் பொது நூலகம் அமைப்பின் ஊடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு அந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் நாமராஜா மற்றும் கேதீஸ் ஊடாக இரண்டு கணினி இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மாணவர்களின் கணிணி அறிவை விருத்தி செய்யும் வகையிலும் பாடசாலை அலுவலக நாளாந்த பணிகளை துரித மாக செயற்படுத்துவதற்காகவும் சுவிஸில் வசிக்கும் தமிழ் பொது நூலகம் அமைப் பின் தலைவர் இராமச்சந்திரன் மற்றும் அதன் இலங்கைக்கான இணைப்பா ளர் ஆசிரியர் மோகனதாஸ், துணை இணைப்பாளர் டிலூஷன் ஆகியோரால் நேற்று (27) ஞாயிற்றுக்கிழமை இவை வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் பொது நூலகம் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் ஆசிரி யர் மோகனதாஸ், துணை இணைப்பா ளர் டிலூஷன் ஆகியோரால் இக்கணினி கள் பாடசாலையின் பிரதி அதிபர் ப.இளங்கோவிடம் கையளிக்கப்பட் டன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் ப.இளங்கோ, தமிழ் பொது நூல கம் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் ஆசிரியர் மோகனதாஸ், துணை இணைப்பாளர் டிலூஷன், ஆசி ரியர்கள் திருநாமராஜா, பி.கேதீஸ் உட்பட மாணவர்களும் கலந்துகொண்ட னர்.





# ஸ்டாலின், விஜய் வீடுகளுக்கு மர்ம நபர் வெடிகுண்டு மிரட்டல்

ஒரே நேரத்தில் தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலின், நடிகர் விஜய் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என தெரியவந்தது.

சென்னை எழும்பூரில் செயல்பட்டு வரும் மாநில பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு நேற்று அதிகாலை வந்த தொலைபேசி அழைப்பில் , எதிர் முனையில் பேசிய நபர் 'முதல்வர் வீட்டுக்கு வெடிகுண்டு வைத்துள்ளேன். அது சற்று நேரத்தில் வெடித்து சிதறும். முடிந்தால் தடுத்துப் பாருங்கள்' எனக் கூறி இணைப்பை துண்டித்தார்.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த கட்டுப்பாட்டு அறை பொலிஸார் உடனடியாக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, தேனாம்பேட்டை பொலிஸார், வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாயுடன் ஆழ்வார்பேட்டை சித்தரஞ்சன் வீதியில் உள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் வீடு மற்றும் வீட்டு வளாகம் முழுவதும் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் சோதித்து பார்த்தனர்.

பலமணி நேர சோதனைக்கு பின்னர் சந்தேகப்படும்படி எந்த பொருள்களும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து, வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்தது. மிரட்டல் விடுத்த நபரை தனிப்படை அமைத்து பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேபோல், நேற்று காலை பொலிஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்ட மர்ம நபர் த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் வீட்டில் வெடிகுண்டு வைத்துள்ளதாக மிரட்டல் விடுத்து தொலைபேசி இணைப்பை துண்டித்தார்.

இதையடுத்து, நீலாங்கரை பொலிஸார் விஜய் வீட்டுக்கு வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்களுடன் சென்று சோதனை மேற்கொண்டனர். அங்கும் சந்தேகப்படும்படி எந்த வெடிபொருள்களும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து இந்த மிரட்டலும் புரளி என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த மிரட்டல் விடுத்தது விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்த கூனிமேடுகுப்பம் பகுதியைச் சேர்ந்த புவனேஷ்வர் என தெரியவந்தது. இவர், சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர். கடைசியாக டி.வியில் யாரை பார்க்கிறாரோ அவரது பெயரை குறிப்பிட்டு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பதை வழக்கமாக வைத்துள்ளார்.

இதற்கு முன்னர் இவர் இதேபோல் முதல்வர் மு.க.ஸ்டாலின், நடிகர் சூர்யா உட்பட பலருக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார். அவரை பொலிஸார் எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

இதேபோல், அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் சென்னை விமான நிலையத்துக்கும் நேற்று முன்தினம் இரவு இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. சோதனையின் முடிவில் எதுவும் சிக்கவில்லை. அண்ணா பல்கலைக் கழகத்துக்கு இதுவரை தொடர்ந்து 21 முறை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிலையான பொருளாதார வளர்ச்சியே இலக்கு: மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதி

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்துவதே அரசின் முதன்மையான இலக்காக உள்ளது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதிபட தெரிவித்துள்ளார்.

புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து மேலும் உரையாற்றுகையில்,

"மத்திய அரசைப் பொறுத்தவரையில் பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்துவது, அதற்கு தேவையான ஆதரவுகளை வழங்குவது ஆகிய வற்றை முதன்மை யான இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறது.



பிரதமர் நரேந்திர மோடி, ஒவ்வொரு ஆண்டும் மூலதன செலவினங்களை அதிரிக்க வேண்டும் என்று நிதியமைச்சகத்துக்கு தனிப்பட்ட முறையில் அழுத்தம் கொடுத்து வருகிறார். அதனால்தான் பொது முதலீட்டுக்கு அதிக முன்னுரிமை தரப்பட்டு வருகிறது. எனக்கு தெரிந்த தரவுகளின் அடிப்படையில், முதலீடு என்பது நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையான அடிப்படை.

அந்த வகையில், இந்தியா அதிக முதலீட்டைப் பெறுவதற்கு இந்தியாவின் நட்பான அந்நிய நேரடி முதலீட்டு (எப்.டி.ஐ) கொள்கை மிக முக்கிய காரணமாக விளங்குகிறது. தற்போது முதலீடுகளை ஈர்க்க மாநிலங்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன." என்று தெரிவித்துள்ளார்.



# ஹறித்வாரில் கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 6 பேர் உயிரிழப்பு

உத்தரகண்டம் மாநிலம் ஹரித்வாரில் மானசா தேவி கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளார். மேலும் 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மானசா தேவி கோவிலில் நேற்று சுவாமி தரிசனம் செய்ய ஏராளமானோர் கூடிஇருந்த நிலையில் திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டனர். இந்த கூட்ட நெரிசலில் சிக்கி சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந் தனர்.



மேலும் காயமடைந்த 25 பேரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிலரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுவதுடன், மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஐரோப்பிய ஒன்றியத்துடன் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் வர்த்தக ஒப்பந்த கட்டமைப்பொன்றை எட்டியுள்ளன.

இது, உலகின் இரண்டு பெரிய பொருளாதார பங்காளிகளுக்கிடையே பல மாதங்களாக நீடித்து வந்த முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோருக்கு இடையே ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.



இதன்படி, அனைத்து ஐரோப்பிய ஒன்றிய பொருட்களுக்கும் 15வீத அமெரிக்க வரியை விதிப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

அத்துடன், 27 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க ஏற்றுமதியாளர்களுக்கு வரியற்ற சந்தையைத் திறக்கும் என உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும், உலக வர்த்தகத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தைப் போலவே, இங்கிலாந்து, ஜப்பான், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாமுடன் டொனால்ட் ட்ரம்ப் வரி ஒப்பந்தங்களைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# மலேசியா மத்தியஸ்தராகச் செயற்பட தாய்லாந்தும் கம்போடியாவும் இணக்கம்

தாய்லாந்தும் கம்போடியாவும் தங்கள் எல்லைப் பிரச்சினையில் மலேசியா மத்தியஸ்தராகச் செயல்படுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளன என மலேசிய வெளிவிவகார அமைச்சர் மொஹமட் ஹசன் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதிகளில் பல நாள்களாக மோதல்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாக ஒருவரையொருவர் குற்றம் சாட்டினர்.

இந்த மோதலில் முன்னதாக தாய்லாந்தில் 13 பேரும் கம்போடியாவில் 8 பேரும் உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 200,000 இற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், கம்போடிய பிரதமர் ஹுன் மானெட் மற்றும் தாய்லாந்து இடைக்கால பிரதமர் பும்தம் வெச்சாயாச்சாய் இன்று பேச்சுவார்த்தைக்காக மலேசியாவுக்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஆசியான் பிராந்திய மன்றத்துக்குத் தலைமை தாங்கும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம், வெள்ளிக்கிழமை போர் நிறுத்தத்தை முன்னதாக முன்மொழிந்தார்.

இதற்கிடையில், சனிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் இதில் தமது கருத்தைத் தெரிவித்து, இரு தலைவர்களும் போர் நிறுத்தத்திற்கான பணிகளைத் தொடங்க ஒப்புக்கொண்டனர் என கூறினார்.



# காசாவில் அதிகரிக்கும் போர்க் குற்றங்கள்

இஸ்ரேல் தொடர்ச்சியான போர்க் குற்றங்களைச் செய்துள்ளது என்பதற்கான தெளிவான சான்றுகள் உள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா பொதுமக்களின் பட்டினி, இஸ்ரேலியப் படைகள் இராணுவ நடவடிக்கைகளின் போது காசா மக்களைப் பாதுகாக்கத் தவறியது, இதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகள் கொல்லப்பட்டனர்.

இதனிடையே, பலஸ்த்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல், இனப்படுகொலை செய்வதாகக் குற்றம்சாட்டி சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கை இஸ்ரேல் கண்டித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் மறுக்கும் அதேநேரம், அவை யூத எதிர்ப்பு அவதூறுகள் என்று தெரிவித்துள்ளது.





கனடா முரசு
பக்கம் 02
திங்கட்கிழமை 28/07/2025

## விமான விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவில், நியூபவுண்ட் லாந்தின் மேற்கு பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஒரு சிறிய விமானம் விபத் துக்குள்ளானதை 02



# ஒன்ராறியோவில் புயல் எச்சரிக்கை

**வடமேற்கு ஒன்ராறியோவில் சில பகுதிகளில் சுழல்காற்று மற்றும் தீவிர இடியுடன் கூடிய மழை பற்றிய எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.**

**சுழல்காற்றுக்கான எச்சரிக்கை காகா பெகா பேல்ஸ், வைற்பிஸ் லேக், அரேவ் லேக், அடிகோகன் மற்றும் கியுடிகோ பார்க்பகுதிகளில்அமல்படுத்தப்பட்டுள்ளது.**

மேலும் சன்சையின், கிளென் வாட்டர் மற்றும் ஓகோர்னர் பகுதிகளிலும் பாதிப்பு ஏற்படக்கூடியதாக இருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

புயல் காற்று தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# கிழக்கு ஒன்ராறியோவில் குழந்தை கடலில் மூழ்கி பலி

கிழக்கு ஒன்ராறியோவில் கடலில் மூழக்கி 3 வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

மைல் ரோச்சஸ் கடற்கரையை அண்டிய கடலில் இந்த சம்பவம் இடம்பெற்ள்ளதாக ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் மாலை 5.45 மணியளவில் லாங் சால்ட், ஒன்ராறியோவில் உள்ள Mille Roches Beach பகுதியில் நிகழ்ந்ததாக தெரிவித்துள்ளனர்.

திடீர் என ஏற்பட்ட இந்த அவசர நிலையை தொடர்ந்து, அவ்விடத்திற்கு அழைக்கப்பட்ட மீட்பு பணியாளர்கள் மற்றும் கட்டிடத்திற்கு வெளியே இருந்த வைத்திய நிபுணர்கள், குழந்தையின் உயிர் மீட்க முயற்சித்துள்ளனர்.

குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் சிகிச்சைகள் பலனின்றி உயிரிழந்து விட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் அடையாளம் இது வரையில் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோடை காலத்தில் ஒன்றாரியோவில் இவ்வாறான நீரில் மூழ்கி இறக்கும் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# அதிக வெப்ப நிலை தொடர்பில் டொரொன்டோவில் எச்சரிக்கை

டொரொன்டோ நகரம் மற்றும் தெற்கு ஒண்டாரியோ மாகாணத்தின் பெரும்பாக பகுதிகளில் தொடர்ச்சியான பல தினங்களுக்கு வெப்பநிலை நீடிக்கும் எச்சரிக்கை விடுக்கப் பட்டளளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த வெப்பநிலை அதிகரிப்பு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வெப்ப அலை ஞாயிற்றுக் கிழமையன்று தொடங்கி செவ்வாய்க் கிழமை வரை நீடிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

டொரொன்டோவில் பகல் நேர வெப்பநிலை 30°C - 34°C வரை உயர வாய்ப்பு உள்ளதாக எதிர்வுகூறப்பட் டுள்ளது.

ஈரப்பதம் காரணமாக உணரப்படும் வெப்பநிலை 36°C - 42°C வரை இருக் கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரத்திலும் வெப்பம் குறை வாகவே இருக்கும். 19°C - 23°C வரை மட்டுமே குளிர்ச்சி ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள் கிழமை தான் மிகக் கடும் வெப்பநிலை பதிவாகும் என தேசிய வானி லைத் துறை எச்சரிக்கை செய்துள்ளது.

கடும் வெப்பநிலை நீடிக்கும் காலம் ஒவ்வொரு பகுதிக்கும் மாறு படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கடவுச்சீட்டு தரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்

கனடாவின் கடவுச்சீட்டு தரம் உலக அரங்கில் வீழ்ச்சியடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகப்புகழ் பெற்ற Henley Passport Index (HPI) வெளியிட்ட அண்மைய தரவின்படி, கனடாவின் கடவுச்சீட்டு சக்தி தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. தற்போதைய தரவரிசையில், கனடிய கடவுச்சீட்டு 184 மதிப்பெண்கள் பெற்றுள்ளது.

இதன் பொருள், கனடிய கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் உலகின் 227 நாடுகளில் மொத்தமாக 184 நாடுக ளுக்கு வீசா இன்றி செல்ல முடியும்.

இந்த தரவரிசையில், கனடா தற் போது எஸ்டோனியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இணைந்து உலகின் எட்டாவது சக்திவாய்ந்த கடவுச்சீட் டைக் கொண்ட நாடாக கருதப்படு கிறது.

எனினும் கடந்த ஆண்டு ஏழாம் இடத்தை வகித்து வந்த கனடா தற் பொழுது ஒரு இடம் பின்தள்ளி உலக தர வரிசையில் எட்டாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து இப்போது வரை, கனடா கடவுச்சீட்டு இன்னும் ஒரு புள்ளியை இழந்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் மொத்த மாக நான்கு புள்ளிகளை இழந்துள்ள நிலையை இது குறிக்கிறது.

Henley Passport Index-ஐ நிர்வகிக் கும் Henley & Partners நிறுவனத்தின் அறிக்கையின்படி, இந்த வீழ்ச்சி ஒரு பெரிய உலகளாவிய மாற்றத்தைக் பிரதிபலிக்கிறது.





## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, கனடாவின் போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் விசாரணை குழு வினரை சம்பவ இடத்திற்கு அனுப்பியுள்ளது.

இந்த விமானம் டீர் லேக் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே, விமான நிலை யத்திற்குத் தெற்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் தரையிறங்கியபோது விபத்துக்குள்ளானது. விமான விபத்தில் உயிரிழந்தவர் பற்றிய விவரங்கள் எதுவும் வெளி யிடப்படவில்லை.

விமான விபத்தின் பின்னர் விமான நிலையத்திற்கு அருகாமையில் காணப்படும் பாதைகள் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானத்தில் எத்தனை பேர் பயணித்துள்ளனர் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்பட வில்லை.